## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2014

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் சகல சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவினங்கள் நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 1,223,917,203 கிரயம் கொண்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டில் ரூபா 61.5 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட கொஹுவலவில் உள்ள காணியும் கட்டிடமும் பல்கலைக்கழகத்தின் தேவைக்கு அமைவாக காணப்படாமையால் களனி பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கைகள் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இக் கையளிப்பு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், பல்கலைக்கழகம் பயன்படுத்தாத சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மருத்துவ பீடத்திற்காக மெத்செவன காணியில் 05 ஏக்கர் அளவிலான காணியைக் கையேற்பதற்காக 1998 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன் செலுத்தப்பட்டு 1 ஏக்கர் 34.2 பேர்ச் கையேற்கப்பட்டிருந்தது. குறித்த காணியைக் கையேற்கும் நடவடிக்கை மெதுவாக இடம்பெறுவதுடன், இதுவரை பொறுப்பேற்கப்பட்டுள்ள காணிப்பகுதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யாமல் செலுத்தப்பட்டிருந்த பணம் முழுவதும் தொடர்ந்தும் தீர்க்கப்படாத முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

இரண்டு முற்பணக் கணக்குகளுக்குரிய மீதிகள் அதற்குரிய பட்டோலைகளுடன் இணக்கம் செய்த போது ரூபா 849,455 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

Rehabilitation of Teaching and Laboratory Equipment முற்பணங்களில் வருடக் கணக்காக இருந்து வரும் ரூபா 90,249 மீதியொன்றை உறுதிப்படுத்துவதற்காக அந்த முற்பணம்

வழங்கப்பட்ட நபர்கள் அல்லது நிறுவகம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக வளவில் காணப்படுகின்ற சேவைகளை வழங்கும் 18 நிறுவனங்களிடமிருந்து மின்கட்டணம் மற்றும் நீர் கட்டணங்களாக 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டிய தொகை முறையே ரூபா 2,909,024 தொகை மற்றும் ரூபா 114,998 தொகையாக இருந்ததுடன், அப்பணத்தை அறவிடுவதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நானாவித முற்பணக் கணக்குகளில் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,994,373 கூட்டுத்தொகையான மீதிகள் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதனுள் மஹரகம நகர சபையின் தலைவருக்கு 1999 பெப்ரவரி 17 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,310,000 மூலதன முற்பணத் தொகையும் உள்ளடங்கியவாறிருந்தது.

(இ) மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் வழங்கியதன் பின்னர் எஞ்சிய தொகை மஹாபொல நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமை காரணமாக வருடக் கணக்காக இருந்து வரும் ரூபா 21,197,750 கூட்டுத்தொகையான மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய கணக்குகளாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண இலக்கம் 387 | அரசின் வங்கிக் கணக்கிலிருந்து மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக்கொள்வது தடுக்கப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்தினால் பேணப்பட்டு வரும் பிரதான நடைமுறைக் கணக்கிற்குரிய காசுக் கணக்கில் நாளாந்தம் ரூபா 20 மில்லியன் முதல் 80 மில்லியனுக்கு இடைப்பட்ட மேலதிகப் பற்று மீதியொன்று பேணப்பட்டிருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவன தாபன விதிக்கோவையின் 26 ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தி | நிதியாண்டின் இறுதி திகதியில் நிறுவகத்திற்குச் சொந்தமான சகல பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள், அச்செயற்பாட்டிற்காக நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையொன்றின் மூலம் சரி பிழை பார்க்கப்பட வேண்டிய போதிலும், 2005 ஆம் ஆண்டின் பின்னர் பல்கலைக்கழகத்தின் நூலகப் புத்தகங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது சரியாக நிறைவு செய்யப்பட்டு அறிக்கை |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு அங்கீகரித்துள்ள சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு புறம்பாக பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற வெளி செயற்திட்ட பாடநெறி வருமானங்களிலிருந்து ரூபா 9,546,462 தொகை படிகளாக கல்விசாரா பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 2/2014 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆராய்ச்சி முன்மொழிவொன்றை ஆராய்ச்சிக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அக்குழு தீர்மானித்த திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் ஆராய்ச்சி படிகள் செலுத்த முடியும். எனினும், விரிவான ஆராய்ச்சி முன்மொழிவொன்றில்லாமல் ஆராய்ச்சி படிக்கு உரித்துள்ள அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 92,985,311 கூட்டுத்தொகையான ஆராய்ச்சி படிகள் வழங்கப்பட்டி ருந்ததுடன், ஆராய்ச்சி படிகளைப் பெற்றுக்கொண்ட எந்தவொரு உத்தியோகத்தரோ அல்லது விரிவுரையாளர்களோ சுற்றறிக்கையின் பிரகாரம் செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கணக்காண்டு ஆரம்பத் தினத்தில் உள்ளவாறு திறைசேரியின் அங்கீகாரமொன்று இல்லாமல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழக நிதியத்திற்கு மேலதிகமாக 18 நிதியங்கள் பேணப்பட்டு வந்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் அங்கீகாரின்றி மீண்டும் 5 புதிய நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 99 (ஈ) பிரிவின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனமொன்றுக்கு எந்தவொரு மூலத்திலிருந்தும் கையேற்கப்பட்ட பணமும் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 55,609,758 தொகையான வருமானத்தை வெளிவாரி பட்டப்படிப்பு பாடெநெறி வருமானம் ஏனைய நிதியங்கள் 22 இற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(இ) (i) பல்லைக்கழகத்தின் நோக்கத்திற்குப் புறம்பாக உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரமொன்றில்லாமல் 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி பகல்நேர காப்பகமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,157,455 தொகையும், ஆசிரிய உதவியாளரின் சம்பளத்திற்காக ரூபா 562,500 தொகையும், முன்பள்ளி பாடசாலைப் புத்தகங்களுக்காக ரூபா 463,752 தொகையும், ஏனையவை ரூபா 5,865 ஆகவும் மொத்தம் ரூபா 2,189,572 தொகை அரச நிதியலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ii) உபவேந்தர் நிதியத்தின் கட்டளைகளுக்கு இணங்காத வகையில் பகல்நேர காப்பக நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது அனுமதிக்கப்பட்ட 28 மாணவர்களுக்காக மக்கள் வங்கியில் கணக்குகள் ஆரம்பிப்பதற்காக உபவேந்தர் நிதியத்திலிருந்து ரூபா 58,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நிதி அமைச்சினதும் உயர் கல்வி அமைச்சினதும் அங்கீகாரமொன்றில்லாமல் பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டினுள் ரூபா 294 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ரூபா 709 மில்லியனாக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 145,069,392 மிகையொன்றானதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 341,172 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 145,410,564 ஆன அதிகரிப்பொன்று காட்டப்பட்டது. வெளியக செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்தருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் 4 பீடங்களில் கல்வி கற்றிருந்த 11,079 மாணவர்களிற்காக ரூபா 2,092,976,415 தொகை மீண்டெழும் செலவினமாக செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 10,455 மாணவர்களிற்காக ரூபா 1,813,208,326 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், பீடங்களின் பிரகாரம் மாணவரொருவருக்கான கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளதுடன், மாணவர் ஒருவருக்கான சராசரிக் கிரயம் முன்னைய ஆண்டை விட ரூபா 15,484 ஆல் அவதாவது 8.93 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

| **பீடம்** | **மாணவரொருவருக்கான கிரயம்** | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| | **ரூபா** | **ரூபா** |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 231,416 | 218,901 |
| மானிடக் கலைகள் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 170,288 | 156,310 |
| முகாமைத்துவ, வர்த்தக விஞ்ஞான பீடம் | 137,587 | 123,438 |
| மருத்துவ பீடம் | 382,780 | 355,329 |
| மாணவரொருவருக்கான சராசரிக் கிரயம் | **188,913** | **173,429** |

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றுவதற்காக சம்பளத்தை மீள்நிரப்புதல் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த விரிவுரையாளர் ஒருவருக்கு பல வருடங்களாக

செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,437,882 கல்விசார் படிகளை குறித்த நிறுவனங்களிடமிருந்து மீள் நிரப்ப முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளமையால் அத் தொகையினை குறித்த விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும், அதற்குரித்தாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பட்டப்பின் படிப்பு / கலாநிதி பட்டம் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்காக கல்விசார் விடுமுறைகளைப் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்றிருந்த 62 பேர் உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ளவாறு ரூபா 96,977,398 கூட்டுத்தொகையான பிணைமுறிகளின் பெறுமதி அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 36 விரிவுரையாளர்களால் உடன்படிக்கைளை மீறப்பட்டு 5 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அவ்விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 38,393,477 தொகையை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தினால் எதுவித சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக பதவியணியினரை வெளிநாட்டு மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் குறுங்கால பயிற்சி பாடநெறிகளில் பங்குபெறச் செய்வதற்கு பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பாக பொது வேலைத்திட்டமொன்று இல்லாமை மற்றும் உத்தியோகத்தர்களினால் தனிப்பட்ட விதத்தில் பாடநெறிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஈடுபாடு காட்டுதல் காரணமாக தனிப்பட்ட ரீதியில் தெரிவுசெய்தல் இடம்பெறுகின்றமை என்பதை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாததாக இருந்தது. மீளாய்வாண்டில் இதற்காக பாதிடப்பட்ட மதிப்பீடு ரூபா 6.5 மில்லியனாக இருந்த போதிலும், உள்ளவாறான செலவினம் ரூபா 28.48 மில்லியனாக இருந்தன. முன்னைய ஆண்டில் இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 7.8 மில்லியனாக இருந்தமையால் 363 சதவீதமான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் திருத்திய 72 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 150 இன் பிரகாரம் 8 வருடங்களுக்குள் பட்டப்பின்படிப்பு அல்லது கலாநிதி பட்டமொன்றை பூர்த்தி செய்யாததன் காரணமாக சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்த 4 பயிலுனர் விரிவுரையாளர்கள் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டப்பின் படிப்பு சான்றிதழை அடிப்டையாகக் கொண்டு பயிலுனர் விரிவுரையாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருந்ததுடன், அவ்விரிவுரையாளர்களுக்கு பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் நியதிகளுக்கு இணங்காத வகையில் சிரேஷ்ட விரிவுரையாளர் II தரத்தை வழங்கியதன் ஊடாக சட்டரீதியாக உரித்துப் பெறாத 8 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலமொன்று உரித்தாகியிருந்ததுடன், உரித்துப்பெறாத வருடாந்த ஓய்வு விடுமுறை, பணிக்கொடை படிகள், தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதி வரையில் இதில் இரண்டு விரிவுரையாளர்களுக்கு தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒரு விரிவுரையாளருக்கு ஒரு வருட ஓய்வு விடுமுறை வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய உயர் கல்வி அமைச்சு செயலாளரின் HEM/2010 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகாரமொன்று இல்லாமல் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளுமாறும் 2011 ஒக்தோபர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தில் தற்காலிக பதவிகளை பேணிச் செல்வதற்கு அனுமதி வழங்கலை நிராகரித்து உயர்கல்வி அமைச்சு செயலாளரினால் உபவேந்தருக்கு கடிதம் வழங்கப்பட்டிருக்கும் போது 2014 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 13 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகார மொன்றில்லாமல் அமைய மற்றும் தற்காலிக

அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு மாதாந்தம் உயர்ந்த பட்சம் ரூபா 25,000 ஆகும் வரையில் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 1997 நவம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் விரிவுரையாளர் II தரத்தில் ஆறு ஆண்டுகள் சேவைக் காலத்தின் பின்னர் குறித்த விரிவுரையாளர் சுய மதிப்பீட்டு அறிக்கையொன்று சமர்ப்பித்ததன் பின்னர் பேரவையினால் நியமிக்கப்படுகின்ற மதிப்பீட்டுக் குழுவிற்கு உட்படுத்தப்பட்டு சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்ட திகதியில் சிரேஷ்ட விரிவுரையாளர் I ஆந் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக சிரேஷ்ட விரிவுரையாளர் II தரத்தில் ஆறு வருடங்கள் பூர்த்தி செய்த திகதியை பதவி உயர்வு செயற்படுத்தப்பட வேண்டிய திகதியாக கருதி பதவி உயர்வு வழங்கிய காரணத்தினால் ஐந்து விரிவுரையாளர்களுக்கு 2 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகள் முற் திகதியிடப்பட்ட பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்ததுடன், சட்டரீதியற்ற சம்பள உயர்வு வழங்கியமை காரணமாக ரூபா 473,567 ஆன நிலுவைச் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

(எ) கணக்கியல் கற்கைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் பட்டப்பின் படிப்பை பின்பற்றுவதற்காக வெளிநாடு செல்லும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2011 ஒக்தோபர் 27 ஆந் திகதி மீண்டும் சேவைக்கு அறிக்கையிட வேண்டிய போதிலும், அவ்வாறு அறிக்கையிடாததன் காரணமாக 2013 மே 09 ஆந் திகதி பேரவையினால் பதவி வரிதாக்கிச் சென்றதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடுவதற்காக 03 மாதங்களுக்குள் மேன்முறையீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2014 சனவரி 28 ஆந் திகதி அதாவது 25 மாதங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 976 மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை மிகைத்து சேவைக்கு வராத காலத்தை சம்பளமற்ற விடுமுறையாகக் கருதி அவ்விரிவுரையாளர் இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பள அளவில் வைத்து ஆட்சேர்ப்பதற்கு பேரவையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை மீறியமையால் அறவிடப்பட வேண்டிய பிணைப்பொறுப்பின் பெறுமதி ரூபா 4,036,446 தொகை அறவிடப்படாதிருந்ததுடன், சட்டரீதியாக பெற்றுக்கொள்ளக்கூடிய சம்பளத்தை மிகைத்து ரூபா 484,165 தொகையும் 2014 ஆம் ஆண்டில் சட்டரீதியாக உரித்துப் பெறாத தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரமொன்றும் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பீடத்தின் கணனி உள்ளீட்டு உதவியாளர் II பதவியில் சேவை புரிந்த உத்தியோகத்தரொருவர் பீடத்தில் பதிவுசெய்த சில மாணவர்களின் பதிவுக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் என்பவற்றை பல மோசடிகள் செய்தமை அறிக்கையிடப்பட்டிருக்கையில் மனிதவள மற்றும் கலைப் பீடத்தின் ஊடக தொடர்பாடல் டிப்ளோமா கற்கைக்காக வேறு பட்டப்படிப்பு அபேட்சகரின் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து பரீட்சை மோசடியொன்றை மேற்கொண்டிருக்கையில் மேற்படி முறைப்பாடு தொடர்பாக வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு 428 ஆவது பேரவை மூலம் கட்டளையிடப்பட்டிருக்கையில் எதுவித பரிசோதனையொன்றுமில்லாமல் அவ் உத்தியோகத்தரின் இடமாற்றத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

(ஐ) பல்கலைக்கழகத்திற்காக புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது வழங்கப்பட்ட உணவு வேளைக்காக கொண்டு வரப்பட்டிருந்த 4 பால் பைக்கற்று பெட்டிகள் காணாமல் போனமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனை அறிக்கையில் விரிவுரையாளரொருவர் மோசடியான முறையில் செயற்பட்டுள்ளதாகவும் அவருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டு வரைவு

குற்றச்சாட்டுப்பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பட்டப்பின் படிப்பு பீடத்தின் பாடநெறிகளுக்காக பதிவுசெய்யப்பட்ட ஆறு மாணவர்கள் ரூபா 220,750 தொகையான பாடநெறிக் கட்டணம் செலுத்தாதிருக்கையில் இறுதிப்பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கும் பட்டப் படிப்பை பூர்த்தி செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆராய்ச்சி உதவிகளின் கீழ் ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 18 விரிவுரையாளர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. இவ் ஆராய்ச்சிகளுக்காக பல்கலைக்கழகத்தினால் ரூபா 5,209,759 தொகை ஆராய்ச்சி உதவிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முகாமைத்துவத்தினால் மேற்படி ஆய்வு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவோ அல்லது ஒவ்வொரு விரிவுரையாளரும் பெற்றுக்கொண்ட பணத்தை மீள அறவிடுவதற்கோ கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் திரட்டு நிதியத்திலிருந்து ஆராய்ச்சி செலவினம் மேற்கொள்ள கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆராய்ச்சி செலவினங்களுக்காக அரசின் நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆராய்ச்சி படிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தனிப்பட்ட ரீதியில் ஆராய்ச்சியொன்றை மேற்கொள்ள வேண்டுமென மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆராய்ச்சி உதவிகள் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் தகவல்களை வழங்கி 21 விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி படிகளைப் பெற்றிருந்தனர்.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமொன்று முடிவடைந்ததன் பின்னர் செயற்திட்டக் கணக்குகளில் தேறிய மிகை பல்கலைக்கழக நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 8 செயற்திட்டங்களின் மிகையான ரூபா 2,015,253 மிகை செயற்திட்டத்திற்கு பொறுப்பாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய அபிவிருத்தி நிதியங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த 9 விரிவுரையாளர்கள் வாரத்தின் வேலை புரியும் தினங்களில் கடமை நேரத்தில் பல்கலைக்கழகத்தின் உள்ளக மாணவர்களுக்காக நடாத்திய விரிவுரைகளுக்காக ரூபா 359,500 தாகையான வெளியக விரிவுரையாளர் படிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். கடமை நேரத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்காக பல்கலைக்கழகத்தினால் சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்படுவதால் அதற்கு மேலதிகமாக வெளியக விரிவுரையாளர் படிகளைச் செலுத்துவதற்கு காரணமான விடயங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 மார்ச் மாதத்தின் போது நடாத்தப்பட்ட கலைத்துறை வெளிவாரி பட்டப்படிப்பு II பரீட்சையின் சமூக விஞ்ஞான ஆராய்ச்சி முறைமை பாடத்தின் விடைத்தாள்

பொதியொன்றைப் பரீட்சிப்பதற்காக விரிவுரையாளரொருவருக்கு இரண்டு முறை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 200 விடைத்தாள்களைக் கொண்டிருந்த அப்பொதிக்காக இரண்டாவது தடவை பரீட்சிப்பின் போது 202 பரீட்சிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு குறித்த விரிவுரையாளரால் ரூபா 24,20 தொகை மதிப்பீட்டுக் கட்டணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. விடைத்டதாள்களை இருமுறை மதிப்பீடு செய்யப்படுகின்ற போதிலும், இரு முறை பரீட்சிப்பிற்கான காரணங்கள் மற்றும் விடைத்தாள் பொதியில் காணப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து கொடுப்பனவு செய்த விதம் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை தயாரிப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 2005 ஆம் ஆண்டில் ரூபா 1,147,412 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பதிவேடொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 நிதியத்தின் குறைப்பயன்பாடு

ரூபா 21,311,104 கூட்டுத்தொகையான 71 வெகுமதி நிதியங்களில் (Endowment Funds) ரூபா 18,101,513 மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 3,209,591 தொகையினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

300 மாணவர்களிற்கு விடுதி வசதிகளை வழங்கும் நோக்குடன் 1998 மே 05 ஆந் திகதி மேல் மாகாண சபைக்கு ரூபா 1.6 மில்லியன் செலுத்தியிருந்த பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள 41.31 பேர்ச் காணி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2003 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கெஸ்பேவ பிரதேச செயலாளரால் பல்கலைக்கழகத்திற்கு அதன் உரித்தைக் கையளித்திருந்த போதிலும், அத்திகதியிலிருந்து அக்காணி பயனுள்ள செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் சட்ட பிரிவினால் பல்கலைக்கழகத்திற்கு நிதி நட்டம் ஏற்படக்கூடிய வகையில் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட வாடகை உடன்படிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கையொப்பமிட்ட காரணத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட விடுதியொன்றின் உடன்படிக்கைக் காலம் நிறைவடைவதற்கு அண்மித்திருக்கையில் பல்கலைக்கழகத்தினால் உடன்படிக்கை திகதியை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கைத் தரப்பினர் அதற்கு இணக்கப்பாட்டை வழங்காமல் பழைய உடன்படிக்கையின் 23 ஆவது பிரிவின் பிரகாரம் பயன்படுத்திய காலத்திற்காக வாடகைத் தொகையில் இரண்டு மடங்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டிருந்தனர். அதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் பயன்படுத்தப்பட்ட 4 மாதங்களுக்காக வாடகையாக ரூபா 3,281,840 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2004 திசெம்பர் 23 ஆந் திகதிய 2004/ED/HE/63 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முரணான வகையில் விலைகளை அடிப்படையாகக் கொண்டு விடுதிகளுக்காக வாடகை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக கணக்காண்டின் இறுதி வரையில் ரூபா 12,819,505 தொகை குறித்த நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2004 ஆம் ஆண்டின் போது முடிவடைந்த Limnology செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட CDMA தொலைபேசியை இடைநிறுத்துவதற்கு அல்லது தொலைபேசியை தேவையான வேறொரு பிரிவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அவ்வாண்டிலிருந்து 119 மாதங்களுக்காக மாதாந்த நிலையான கட்டணமாக ரூபா 113,050 தொகை தொலைபேசி கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழக கழிவுநீரை அகற்றும் ரூபா 70 மில்லியன் கிரயம் கொண்ட செயற்திட்டத்திற்காக 2003 ஆகஸ்ட் 06 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அந்த நிர்மாண நடவடிக்கைகளுக்காக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அடிப்படை திட்டத்தினை தயாரிப்பதற்காக ரூபா 2,336,090 செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு பல்கலைக்கழகம் தீர்மானித்திருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட செலவினம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 48 பதவிகளில் 267 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழகத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் 15 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 88 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் நிரந்தர பதவியணிக்காக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) 2014 மார்ச் 31 ஆந் திகதிய 3/2014 ஆம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் புதிதாக பதவிகளை உருவாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அங்கீகரிக்கப்படாத 04 பதவிகளுக்காக 05 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவன தாபன விதிக்கோவையின் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவின் பிரகாரம் கல்விசார் பதவியணியினரின் வருகை, வெளிச்செல்கை மற்றும் விடுமுறைகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நடைமுறையொன்றை தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அவ்வாறான நடைமுறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டிருக்காமையால் கல்விசார் பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,087,509,732 ஆன சம்பளம் மற்றும் படிகளுக்குரிய சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) ஆராய்ச்சி தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு
(ஈ) சுயாதீன நிதியளித்தல் பாடநெறி முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஊ) உடன்படிக்கைகளும் பிணை முறி அறவீடுகளும்
(எ) கொள்வனவு
(ஏ) வெளிவாரி பரீட்சை வினாப்பத்திரங்களை மதிப்பீடு செய்வது தொடர்பான உள்ளக் கட்டுப்பாடு